நீதிமன்றப் படிவ எண்.53
(விதி 42–ஐ காண்க)
சாட்சியின் சான்றுரை
(கு.வி.மு.ச. அத்தியாயம் XXIII)
மகிளா நீதிமன்றம் , கடலூர்
அமர்வு வழக்கு எண்.50/2022
அரசு தரப்புக்காக அ. சா.7 சாட்சியின் சான்றுரைகள்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | Dr.சுகன்யா | தொழில்/ பதவி | |
| கணவர்/தந்தை பெயர் | | வயது | |
| கிராமம் | | வட்டம் | |
| சாட்சிப்பட்டியலில் வரிசை எண் : L.W. 13 | | | |

எதிரி ஆஜரில் இருந்தார்.

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 04th day of March 2026.

**முதல் விசாரணை–** (ஆரம்பிக்கப்பட்ட நேரம் 11.20)

நான் தற்போது கடலூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.09.2021 பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது மாலை 5.20 மணி அளவில் சரணவன் என்பவரின் மனைவி செங்கேணி வயது 38 சத்திய மூர்த்தி தெரு, பண்ருட்டி என்பவரை அவரது கணவர் சரவணன் அழைத்து வந்தார். நான் அவரை பரிசோதனை செய்தபோது அவர் மதியம் 2.00 மணியளவில் தனது வீட்டில் போரேட் மருந்து உட்கொண்டதாக கூறினார். அவரை பரிசோதனை செய்தபோது

சுயநினைவுடனும் நாடித்துடிப்பு சீராகவும் இருந்தது. முதலுதவி செய்து மேல்சிகிச்சைக்கு கடலூர் தலைமை அரசு மருத்துவமனைக்கு அனுப்புவதற்கு தயார் செய்து 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னேன். அவர் அந்த 108 ஆம்புலன்சிற்குள் ஏற்றும்போது 29.09.2021 மாலை 06.30 மணிக்கு மாரடைப்பு ஏற்பட்டு இறந்துவிட்டார். அவரது உடலை சவக்கிடங்கிற்கு அனுப்பி வைத்தேன். (இந்த தகவல்களை குறிப்பிட்டு நான் வழங்கிய விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது). இவ்வழக்கிற்காக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

செங்கேணி என்பவரை பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து வரும்போது அவர் சுயநினைவுடன் தான் இருந்தார் என்றால் சரிதான்.

**மறு விசாரணை** இல்லை

(முடிக்கப்பட்ட நேரம் 11.32 )

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 04 ஆம் நாளன்று, 1969–ஆம் ஆண்டு உறுதி மொழி சட்டம் (மையச் சட்டம் 44/1969)–இன் வகைமுறைகளுக்குட்பட்டு உளமார உறுதியளிக்கிறேன்.

சாட்சியின் கையொப்பம்

*" என்னால்/என் முன்பாக திறந்தவெளி நீதிமன்றத்தில் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என வாக்குமூலதாரரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."*

(Sd/–G.Kulasekaran)
அமர்வு நீதிபதி,
மகிளா நீதிமன்றம்,
கடலூர்.